## தேசிய பாடசாலைகள் தொடர்பாக அதிபர்களை தெரவுசெய்து நியமித்தல். (இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரம்) - 2023

### மதிப்பெண் நடைமுறை

**1. சேவை அனுபவம்** **அதிகபட்ச புள்ளிகள் 30**

(ஒழுக்காற்று தண்டனையின் அடிப்படையில் அல்லது சம்பளமற்ற விடுப்புகள் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் அல்லது திருப்திகரமான சேவைக்காலத்தை இழந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு மாத்திரம் அக்காலத்திற்கான புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

I ஆம் தரத்தின் சேவைக்காலத்திற்காக வருடத்திற்கு 02 புள்ளிகள்

**குறிப்பு:**
(12 மாத சேவைக்காலத்திற்காக மாத்திரம் ஒரு வருடத்திற்குரிய மொத்த புள்ளிகள் உரித்தாவதுடன், அதற்கு குறைவான காலத்திற்கு புள்ளிகள் உரித்தாகாது)

**2. கல்வித் தகைமைகள்** **அதிகபட்ச புள்ளிகள் 15**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் / நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.
(பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் உரித்தாகும் வகையில் ஒரு சான்றிதழுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்).

2.1 பட்டப்பின் பட்டம் அல்லது அதற்கு மேலான தகைமை - புள்ளிகள் 15
2.2 பட்டப்பின் பட்ட டிப்ளோமா - புள்ளிகள 12
2.3 அடிப்படை பட்டம் - புள்ளிகள 09
2.4 பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா - புள்ளிகள 06

3. ஆங்கில மொழி தேர்ச்சி அதிகபட்ச புள்ளிகள் 05
( தொடர்பாடல் திறனை கருத்திற்கொள்ளப்படும் )

4. கணினி கல்வி தொடர்பான அறிவு அதிகபட்ச புள்ளிகள் 05
(செயல்திறன் பயன்படுத்தல் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும்)

5. சேவை மதிப்பீடு அதிகபட்ச புள்ளிகள் 05

கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பொது 230 பீ பாராட்டுகள் மற்றும் குறைபாடுகளை எடுத்துக்காட்டும் படிவத்தின் படி முறையாக வெளியிடப்பட்ட சேவை மதிப்பீடுகள் தொடர்பில் ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் 5 அதிகபட்ச சேவை மதிப்பீடுகளுக்காக

**குறிப்பு:**
(திணைக்களத் தலைவர் என்பவர், மாகாண தலைமைச் செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் ஆவார்).

**6. கல்விக்குரிய ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(அதிகபட்ச 5 புள்ளிகளின் கீழ் பின்வரும் புள்ளிகள் வழங்கப்படும்)

6.1 ஆராய்ச்சி - (ஒரு ஆராய்ச்சிக்கு 3 புள்ளிகள் வீதம்)
(பட்டப்பின் பட்டத்திற்கு / பட்டப்பின் பட்ட டிப்ளோமா தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வறிக்கைகள் தொடர்பான ஆராயச்சி/ ஆய்வறிக்கைகள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், பிரசித்திபெற்ற ஆராய்ச்சிகள ஆய்வு கருத்தரங்கு சபைக்கு (Research Symposium) முன்வைக்கப்பட்ட அல்லது ஆராய்ச்சி சஞ்சிகை ஒன்றின் (Research Journal) அறிக்கை தொடர்பாக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)

6.2 வெளியீடுகள் - (ஒரு வெளியீட்டிற்கு 02 புள்ளிகள் வீதம்)
(பாடப் புத்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நூல்கள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் கல்வி நூலட் வெளியீட்டு ஆலோசனை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரின் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பாக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்போது கருத்திற்கொள்ளப்படும். )

**7. முன்னிலைப்படுத்தல்** **அதிகபட்ச புள்ளிகள் 20**

கல்வித் துறையின் புதிய போக்குகள், தற்போதைய கல்விக் கொள்கைகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் கல்வித் துறையில் நிலவும் சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்தி ஒரு தேசிய பாடசாலை அதிபராக எதிர்காலத்தில் பணிபுரிவதற்கு எதிர்பார்க்கும் விதம் குறித்து தமது பிரயோக அனுபவங்களைக் கொண்டு 05 நிமிட வாய்மொழி விளக்கத்தை அளிக்க வேண்டும் என்பதுடன், அதன் கடின பிரதி ஒன்றை நேர்முகத்தேர்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 7.1 நேர முகாமைத்துவம் | - புள்ளிகள் 05 |
| 7.2 தொடர்பாடல் திறன் | - புள்ளிகள் 05 |
| 7.3 உள்ளடக்கம் - (பாடசாலையை அடையாளம் காணுதல், நோக்கங்கள், முன்மொழிவுகள்) | - புள்ளிகள் 05 |
| 7.4 ஒட்டுமொத்த விளக்கங்களுக்கு | - புள்ளிகள் 05 |

**8. சம்பவ ஆய்வுகள்** **அதிகபட்ச புள்ளிகள் 10**

(நேர்முகத்தேர்வுக் குழுவினால் முன்வைக்கப்படும் ஒரு வாய்மொழி சம்பிவத்தை அடிப்படையாக வைத்து கேள்விகள் தொடுக்கப்படும்)

**9. நேர்முகத் தேர்வின்போது வெளிக்கொணரும் ஒட்டுமொத்த திறன் மற்றும் ஆளுமை**

**அதிகபட்ச புள்ளிகள் 05**

**மொத்த புள்ளிகள் 100**

